# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 319 /பேரூ/2025**
**நாள் : 18.02.2026**

P.M. பொன்மணி,
கெங்குவார்பட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கெங்குவார்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திரு. P.M. பொன்மணி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடுக்கப்பட்ட வழக்கு எண். W.P.(MD)No. 26280 of 2024-ல் மாண்பமை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 07.01.2025 நாளிட்ட ஆணை இம்முறைமன்ற நடுவத்தில் 22.08.2025 அன்று பெறப்பட்டுள்ளது. அவ்வாணையில் கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

" 4.1. Registry is directed to transfer the entire records pertaining to the allegations made by the petitioner (Thiru. P.M. Ponmani) to the Chairman, Tamil Nadu Local Bodies Ombudsman Committee, No.100, Anna Salai, Chennai-600 032.

4.2. The Chairman, Tamil Nadu Local Bodies Ombudsman Committee, No.100, Anna Salai, Guindy, Chennai-600 032 is directed to enquire the matter as per the Act 10 of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014. "

மேற்காணும் 07.01.2025 நாளிடப்பட்ட மாண்பமை நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகிறது.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி பேரூராட்சி மன்ற 7-வது வார்டு உறுப்பினருமான மனுதாரர் திரு. P.M. பொன்மணி என்பவர் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை மற்றும் தேனி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்ட 28.11.2023 நாளிட்ட மனுவில் தேனி மாவட்டம், கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 2020-21ஆம் ஆண்டு அடிப்படை

கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட 7 வார்டுகளில் (வார்டு எண்கள் 2,3,4,5,7,14,15) ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறு பாலங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில், மேற்காணும் வார்டுகளில் பாலங்கள் கட்டாமல், போலியான ஆவணங்களின் மூலம் பாலங்கள் கட்டியதாக மேற்காண் நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது எனவும் மேலும் 2021-22ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கப்பட்டதிலும் நிதிமுறைகேடு செய்யப்பட்டுள்ளது என புகார் தெரிவித்திருந்தார் எனவும் மேற்காணும் புகார் மனு குறித்து தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரால் எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாததால், மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு (W.P.(MD) No. 26280 of 2024) தொடர்ந்தார்.

2. அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வானது தனது 07.01.2025 நாளிட்ட ஆணையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10-ன்படி, மனுதாரரின் புகார் மனு குறித்து இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டது. இம்முறைமன்ற நடுவத்தில் 22.08.2025 அன்று பெறப்பட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு 319/பேரூ./2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அம்மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.09.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. மனுதாரர் திரு. P.M. பொன்மணி என்பவர் தனது 28.11.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 7வது வார்டு கவுன்சிலராக இருந்து வருகிறேன். மேற்படி கெங்குவார்பட்டி பேரூராட்சியில் கடந்த 2020-2021ஆம் ஆண்டில் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் வார்டுகள் 2,3,4,5,7,14 மற்றும் 15-ல் (மொத்தம் 7 வார்டுகள்) 13 சிறுபாலங்கள் அமைக்க ரூ.9,20,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபதாயிரம்) ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி ஒப்பந்தப் பணிக்கான தொகைக்குரிய பணிகளை செய்து முடிக்காமல் சுமார் 13 (சிறுபாலங்கள்) கல்வெட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளதாக போலியான கணக்குகளை காண்பித்து மேற்படி பணிகள் நிறைவு பெற்றுவிட்டதாக பொறியாளர்கள் மேலொப்பம் செய்து அதேபோல் நிர்வாகத்தினரிடமும் கடிதம் பெற்று மேற்படி பணி நிறைவு பெற்றுவிட்டதென கூறி மேற்படி பணிக்குரிய தொகைகளை விடுவிப்பு செய்து மேற்படி தொகைகளை ஒப்பந்தகாரர் பெற்றுள்ளார். இது சம்பந்தமாக நான் பல்வேறு கூட்டங்களின் வாயிலாக கேள்விகள் எழுப்பிய போது பதில் வழங்காமல் தற்போதைய செயல் அலுவலர் திரு. ராஜசேகரன் அவர்கள் மௌனம் சாதித்து வந்தார். மேற்படி பணியானது எந்தெந்த வார்டுகளில் எந்தெந்த தேதிகளில் நடைபெற்றது என்ற விபரம் குறித்து பதில் வழங்காமல் தொடர்ந்து எங்களை அவமானப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் மேற்படி பணிகளுக்குரிய வார்டுகளில் மேற்படி பணிகளை மேற்கொள்ளாமல் இருந்துவிட்டு தற்போது அதே பணிகளை செய்ய வேண்டுமென்று கடந்த 10.03.2023ஆம் தேதியன்று வார்டு எண்கள் 2,4,5,7,8,11,12 மற்றும் 15வது வார்டுகளில் 13 சிறுபாலங்கள் அமைப்பதற்காக ரூ.5,30,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் ஒன்றை கெங்குவார்பட்டி பேரூராட்சியால் அறிவிக்கப்பட்டு அதன் பேரில் கடந்த 31.03.2023ஆம் தேதியன்று நடைபெற்ற பேரூராட்சிமன்ற கூட்டத்தின் வாயிலாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அப்போதும் நான் கேள்வி கேட்டபோது தற்போது மேற்படி வார்டுகளுக்கு

வந்தார்கள் என்பது பின்னர் தான் தெரியவந்தது. கடந்த 2020-2021ஆம் ஆண்டில் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளாததால் மேற்படி பணிகள் நிறைவு பெற்றுவிட்டதாக கணக்கை நேர் செய்வதற்காக தற்போது இந்த 7 வார்டுகளுக்கு அவசியத் தேவை என்று சொல்லி வருகிறார்கள்.

மேற்படி ரூ.5,30,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) தொகையில் மேற்கொள்ள வேண்டிய சிறுபாலங்களில் எனது வார்டும் ஒன்றாகும். அதாவது 7வது வார்டிலும் (முத்துமணி வீடு அருகில், மாசி வீடு அருகில், இமானு வீடு அருகில்) சிறுபாலங்கள் அமைக்க மேற்படி ரூ.5,30,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி ரூ.5,30,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) தொகையில் எனது வார்டுக்கான சிறுபாலம் அமைக்காமல் விடுபட்டுவிட்டது. ஏனென்று கேட்டபோது மேற்படி 13 சிறுபாலங்கள் அமைப்பதற்கான தொகையானது குறைவான தொகை என்பதால் என்னால் மேற்படி பணியை செய்ய இயலவில்லை என்று விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் உரிமையாளர் ஆனந்த் என்பவர் கூறியதன் பேரில் அடுத்த கூட்டமான 12.09.2023ம் தேதியன்று மேற்படி 7வது வார்டான எனது வார்டில் மாசி வீடு அருகில் பணி செய்வதற்கு தொகை விடுவிக்கப்பட்டுள்ளதால் பொது நிதியை பயன்படுத்த வேண்டி பேரூராட்சிமன்ற கூட்டத்தில் அனுமதி வேண்டி தீர்மானம் இயற்றப்பட்டது. ஆனால் மேற்படி 13 பாலங்கள் கட்டுவதற்கான இடங்களை குறிப்பிட்டுவிட்டு Estimate மற்றும் Work Order-ல் மேற்படி 27.01.2023ம் தேதி, 31.03.2023ம் தேதி ஆகிய கூட்டங்களில் குறிப்பிடாத 9வது வார்டில் உள்ள மூக்க ராவுத்தர் தெருவில் சிறுபாலம் அமைக்க உத்தரவிட்டு இருப்பது மோசடியான செயலாக இருந்து வருகிறது. மேற்படி தெருவிலும் எந்தவொரு சிறுபாலமும் அமைக்கவில்லை. அதற்கு பதிலாக 9வது வார்டில் பொன்ராஜ் நாயுடு தெருவில் சிறுபாலம் அமைக்கப்பட்டு மேற்படி பணியும் நிறைவு பெற்றுவிட்டது என கூறி பொறியாளர்கள் தரப்பிலும், நிர்வாக தரப்பிலும் சான்று வழங்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு ஆதாரவாக ஒப்பந்தப் பணிக்கான தொகையை விடுவிப்பு செய்து பேரூராட்சிமன்ற தலைவர், செயல் அலுவலர், பொறியாளர்கள், உதவி இயக்குநர் மற்றும் ஒப்பந்ததாரர் அனைவரும் மோசடி செய்து போலி கணக்குகள் உருவாக்கி கூட்டுச்சதி செய்து, ஊழலில் ஈடுபட்டுள்ளார்கள். இதேபோன்று தான் ஒவ்வொரு முறையும், அவர்களாகவே ஒரு பணியை செய்துவிட்டு, மேற்படி பணிக்கு பின் தேதியிட்டு, ஒரு கூட்டத்தின் வாயிலாக அவர்களிடம் அதிகாரம் இருக்கும் காரணத்தால், ஏற்கனவே நாங்கள் மேற்படி இடத்தில் பணி செய்துவிட்டோம். அதற்கான முன் அனுமதி வழங்க வேண்டி அவர்களின் தேவைக்கேற்றாற்போல் பேரூராட்சி அலுவலகத்தில் முறையீடு செய்து தொடர் மோசடியிலும், ஊழல்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இவ்வாறு இருக்கும் போது மீண்டும் மேற்படி மாசி வீட்டு அருகில் சிறுபாலம் அமைப்பதற்கு 12.09.2023ம் தேதியன்று பொருள் எண். 19-ல் குறிப்பிட்டுள்ளவாறு மீண்டும் ஒரு பாலம் அமைத்திட கோருவதும் மிகப்பெரிய ஊழல் ஆகும்.

அதன் பின்னர்தான், திருமதி. மு. அம்புஜம் தனி அலுவலர் மற்றும் செயல் அலுவலர் வடுகப்பட்டி பேரூராட்சி என்பவரால் கடந்த 01.03.2022ம் தேதியன்று சாதாரண கூட்டம் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டு, மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வரிசை எண். 4-ல் வார்டு 6 அரிஜன காலனி, வார்டு 7 மயான சாலையில் சிறுபாலம் அமைத்தல் என்ற வகையில் (7 வார்டுகளுக்கு) ஒதுக்கப்பட்ட 13 சிறுபாலங்களை 6வது வார்டான பேரூராட்சிமன்றத் தலைவர் வார்டுக்கும், எனது வார்டான 7வது வார்டுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி 7வது வார்டிலும், 6வது வார்டிலும் இன்று வரையில் மேற்படி ரூ.9,20,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபதாயிரம்)த்திற்கான பணிகள் நடைபெறவும் இல்லை, நிறைவேறவும் இல்லை. அதுமட்டுமின்றி எனது வார்டில் மொத்தத்திற்கு 3 பாலங்கள் (பஞ்சமுத்து வீடு அருகில், முத்துமணி வீடு அருகில் மற்றும் இமானுவேல் வீடு) மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அதுவும் மேற்படி ரூ.5,30,000த்தில் 2 (முத்துமணி வீடு அருகில் மற்றும் இமானுவேல் வீடு) சிறுபாலங்களும் ஏற்கனவே பதவியேற்ற ஓரிரு நாட்களில் (பஞ்சமுத்து வீடு) அருகிலும் அமைக்கப்பட்ட பாலங்கள்

மட்டுமே தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி ரூ.9,20,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபதாயிரம்) தொகையில் இன்று வரையில் எனது வார்டில் ஒரு சிறுபாலம் கூட கட்டியதில்லை.

அதே போல் தான் கடந்த 30.09.2022ம் தேதியன்று 15வது நிதிக்குழு மானியத் திட்டம் 2021-2022 (Tied Grant) திட்டத்தின் கீழ் கடந்த 30.09.2022ம் தேதி நடைபெற்ற கூட்டத்தின் வாயிலாக கடந்த 16.09.2022ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது என்ற அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது. ஆனால் மேற்படி திட்டம் குறித்தோ அல்லது மேற்படி வார்டுகளுக்கு என்னென்ன தேவை என்பது குறித்தோ கலந்தாலோசிக்காமல் இதற்கு முன்பு கூட்டம் நடத்தாமல் மேற்படி தேதியில் கூட்டம் இயற்றப்பட்டது நன்கு புலப்படும்.

அதாவது போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் என்ற தலைப்பில் வார்டு 6 சேவிகுடும்பன் தெரு சேவி வீடு அருகில், வார்டு 10 வீரணப்பிள்ளை தெரு, வார்டு 5 உசையப்பாதெரு அருள்மலர் பள்ளி பின்புறம், வார்டு 13 செங்குளத்துப்பட்டி மயானம் அருகில் என்று மேற்படி தேதியில் நடைபெற்ற கூட்டத்தின் வாயிலாக குறிப்பிட்டுவிட்டு, மேற்படி 6வது வார்டில் சேவிக்குடும்பன் தெரு என்பது இல்லை. அதேபோல் சேவி என்பவருக்கு 6வது வார்டில் வீடே கிடையாது. ஆனால் மேற்படி சேவி குடும்பன் தெரு என்பதும், சேவி வீடு என்பதும் எனது வார்டான 7வது வார்டில் உள்ள தெருவாகும். அதாவது 7வது வார்டில் உள்ள சேவிக்குடும்பன் தெருவில் சேவி வீடு அருகில் ஏற்கனவே அடிகுழாய் மற்றும் போர்வெல் இருக்கிறது. இந்த விபரத்தை மறைத்து மேற்படி தெருவிற்கு போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைப்பதற்கு ரூ.3,00,000/- ஒதுக்கீடு செய்தது மிகப்பெரிய மோசடி மற்றும் ஊழல் ஆகும். ஏனென்றால் அந்த இடத்தில் சின்டெக்ஸ் மட்டும் அமைத்தாலே போதுமானது. அவ்வாறு அமைத்தால் தொகையானது குறைவாக குறிப்பிடப்படும் என்ற காரணத்தால் போர்வெல்லுடன் கூடிய சின்டெக்ஸ் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதுமட்டுமின்றி மேற்படி 7வது வார்டு சேவிக்குடும்பன் தெருவில் உள்ள சேவி வீடு அருகில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்காமல் 6வது வார்டான பேரூராட்சிமன்ற தலைவர் அவர்களின் வார்டில் உள்ள சங்கிலிவீரன் வீடு அருகில் ஏற்கனவே எனது வார்டை போன்றே மேற்படி இடத்திலும் போர்வெல் அமைத்து அடிகுழாய் இருக்கும் நிலையில், பேரூராட்சிமன்ற கூட்டத்தின் மூலம் எந்தவொரு முன் அனுமதியும் பெறாமல் மேற்படி இடத்தில் போர்வெல் அமைத்ததாக கூறி சின்டெக்ஸ் அமைத்து ரூ.3 இலட்சத்தை போலியாக கணக்கு காண்பித்து ஊழலில் ஈடுபட்டுள்ளார்கள்.

அதேபோல் வார்டு 10 வீரணப்பிள்ளை தெருவில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெற்றுவிட்டு மேற்படி தெருவில், யாருடைய வீட்டின் அருகில் போர்வெல் அமைக்கப்போவதாக குறிப்பிட்டார்கள் என்ற விபரம் எதுவும் இல்லாமல் மேற்படி வார்டிலும் மேற்படி பணிகளை மேற்கொள்ளாமல் அஜந்தாவில் குறிப்பிடாமலும், தீர்மானம் இயற்றிடாமலும் 2வது வார்டில் உள்ள கோம்பை ரோடு செல்லும் மெயின்சாலை அருகில் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் குறித்தும் எந்த கூட்டத்திலும் தெரிவிக்காமல், முன் அனுமதியும் பெறாமல் போர்வெல் அமைத்து பேரூராட்சிமன்ற தலைவர் அவர்களும், செயல் அலுவலர் அவர்களும் மிகப்பெரிய தொடர் ஊழலில் ஈடுபட்டுள்ளார்கள்.

ரூ.50 இலட்சம் ஊழலில் ஈடுபட்டு அதற்கான புகார் அளித்து இன்று வரையில் விடை கிடைக்காத நிலையில், மேற்படி பேரூராட்சியின் 13வது வார்டு செங்குளத்துப்பட்டி மயானம் அருகில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைப்பதற்காக ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலும் ஒரு முறைகேடு மற்றும் ஊழலில் கெங்குவார்பட்டி பேரூராட்சி ஈடுபட்டிருப்பது மிகுந்த மன வேதனைகளையும், மன உளைச்சலையும் உண்டாக்குகிறது. ஏனென்றால் மக்களுக்கு சேவைகள்

செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பதவிக்கு வந்தாலும் இதுபோன்ற அதிகாரிகளின் செயல்களால் மக்களுக்குரிய திட்டப் பணிகள் மக்களுக்கு சென்றடைய முடியாமல் இருந்து வரும் சூழல் ஏற்படுகிறது. ஏனென்றால், மேற்படி 13வது வார்டு மயானத்திலும் ஏற்கனவே போர்வெல் அமைத்து அங்கேயும் ஒரு அடிகுழாய் இருந்து வருகிறது. இவ்வாறு இருக்கும் நிலையில் மேற்படி இடங்களை தேர்வு செய்த அதிகாரிகள் எவ்வாறு ரூ.3 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புக்கொண்டார்கள் என்ற சந்தேகம் எழுகிறது. அதுமட்டுமின்றி ஏற்கனவே போர்வெல் இருக்கும் போது அந்த இடத்திலும் சின்டெக்ஸ் மட்டும் அமைத்தாலே போதுமானது அவ்வாறு மேற்படி இடத்திலும் சின்டெக்ஸ் அமைக்காமல், செங்குளத்துப்பட்டியின் ஊருக்குள் அமைந்துள்ள தங்கம்மாள் தெருவில் மாயாண்டி வீடு அருகில் போர்வெல்லுடன் சின்டெக்ஸ் அமைத்து இருப்பது சொல்லில் அடங்கா ஊழலாகும். அதுமட்டுமின்றி மேற்படி சின்டெக்ஸ் அமைத்த வார்டுக்கும் பேரூராட்சிமன்ற கூட்டத்தின் வாயியாக எந்தவொரு முன் அனுமதியும் பெறாமல் அமைக்கப்பட்ட பணியாகும். மேற்படி பணிகளின் மூலம் ஒப்பந்ததாரரோடு கைகோர்த்துக்கொண்டு செயல் அலுவலரும், பேரூராட்சிமன்ற தலைவர் அவர்களும், பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களும் ஊழலில் ஈடுபட்டிருப்பது தெள்ளத்தெளிவாக தெரிய வரும்.

மேற்படி 3 இடங்களில் மாற்றியமைக்கப்பட்ட போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்க முடியாததற்கு காரணம் என்னவென்று குறிப்பிடுகிறார்கள் என்று பார்த்தால், “மேற்கண்ட இடங்களில் வார்டு 7 சேவிகுடும்பன் தெரு சேவி வீடு அருகில், வார்டு 10 வீரணத்தேவர் தெரு மற்றும் 13 செங்குளத்துப்பட்டி மயானம் அருகில் ஆகிய மூன்று இடங்களில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு இடவசதி இல்லாத காரணத்தால் வார்டு 6 அரிசன காலனி தெற்குத் தெரு சங்கிலி வீடு அருகில், வார்டு 2 கோம்பை, கோம்பை ரோடு தெரு மற்றும் வார்டு 13 செங்குளத்துப்பட்டி தங்கம்மாள் தெரு மாயாண்டி வீடு அருகில் அமைக்கப்பட்டுள்ளது மன்றத்தின் சிறப்பு அங்கீகாரத்திற்கு” என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால், மேற்படி மோசடியில் ஈடுபட்ட மேற்படி ஒப்பந்ததாரர்கள், செயல் அலுவலர்கள், பொறியாளர்கள், உதவி இயக்குநர், அதிகாரிகள் மற்றும் மேற்படி தொகையை, உரிய பணிகள் மேற்கொள்ளாமல் கையாடல் மற்றும் ஊழல் செய்வதற்கு உறுதுணையாய் செயல்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவர் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், மேலும் மேற்படி மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்ட அரசு ஒப்பந்ததாரர்கள், செயல் அலுவலர்கள், பொறியாளர்கள், உதவி இயக்குநர் மற்றும் பேரூராட்சி மன்றத்தலைவர் ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்றும், மேற்படி மோசடிதாரர்களிடமிருந்து மேற்படி மோசடி மற்றும் ஊழல் மூலம் பெறப்பட்ட தொகைகளை பறிமுதல் செய்திட வேண்டியும், கெங்குவார்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கும், அரசு ஒப்பந்ததாரர்களாக செயல்பட்டு மோசடியில் ஈடுபட்டு வரும் ஒப்பந்ததாரர்களை, ஒப்பந்தாரர்கள் பட்டியலில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்றும், அரசுக்கும், நிர்வாகத்திற்கும் வருவாய் இழப்பை ஏற்படுத்திடும் வகையில் தவறான இடங்களை தேர்வு செய்து மேற்படி இடங்களுக்கு தேவைக்கும் அதிகமாக தொகைகளை மிகைப்படுத்தி குறிப்பிட்டு பணிகள் மேற்கொள்ள அதிகார துஷ்பிரயோகம் செய்த மேற்படி நபர்களின் மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளுக்கு பாரபட்சமின்றி அனைவரின் மீதும் வழக்கு பதிவு செய்திட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

4. கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சா. இளங்கோவன் என்பவர் தனது 09.10.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 495/2024-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

தேனி மாவட்டம் கெங்குவார்பட்டி பேரூராட்சி பகுதியில் பேரூராட்சி மன்ற தனி அலுவலர் தீர்மான எண்.72 நாள்.11.11.2020ன் படி 2020—2021 ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில் பணிகள் தேர்வு செய்யப்பட்டு அரசாணை எண். 461, தமிழ்நாடு வீட்டுவசதி

மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 31.12.2020 மற்றும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.10230/1/2020/ஆ5 நாள்.05.01.2021ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து 29.01.2021 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளிபடி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் தீர்மான எண்.8/2021 நாள் 03.02.2021ன்படி தனி அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டு 03.02.2021 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

கெங்குவார்பட்டி பேரூராட்சி தனி அலுவலர் தீர்மான எண்.20/2022 நாள்.01.03.2022ன்படி வார்டு எண் 2,3,4,5,7,14 மற்றும் 15 ல் மொத்தம் 7 வார்டுகளுக்கு ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கும் போது ஊர்பொதுமக்கள் தொடர் புகாரின் அடிப்படையில் மயானம் சாலை விவசாய நிலங்களின் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் நீர் அதிகரித்து சாலை அடிக்கடி மண்அரிப்பு ஏற்படுவதாகவும் அனைத்து சமுதாயத்தினரும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கு எடுத்துச்செல்லும் பாதை என்பதால் மழைக்காலங்களில் மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதனை கருத்தில்கொண்டு பொதுமக்களின் நலன் கருதி கெங்குவார்பட்டி பேரூராட்சி தனி அலுவலர் தீர்மான எண். 20/2022 நாள் 01.03.2022ன்படி வார்டு 6 அரிசன காலனி, வார்டு 7 மயான சாலையில் சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைப்பதற்கு தீர்மானம் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வேண்டி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ந.க.எண்.531/2021/பேரூ1 நாள்.29.04.2022ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகள் இளநிலை பொறியாளரால் 3 சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் பணிகள் முடிக்கப்பட்டமைக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற் பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு 18.10.2022ல் தொகை வழங்கப்பட்டது செலவு சீட்டு தொடர்பான மன்ற கூட்டத்தில் மனுதாரர் கலந்து கொண்டு வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளார். இச்செலவு சீட்டுக்கு 28.10.2022ம் தேதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பொதுநிதி திட்டத்தில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரம்.</u>

பொதுநிதியில் சிறுபாலங்கள் அமைப்பதற்கு பேரூராட்சிமன்ற தீர்மான எண். 83/2022 நாள் 26.12.2022ன்படி 1) வார்டு 12 தேவர் மண்டபம் அருகில், 2) வார்டு 4 முத்துமாரியம்மன் கோவில் முன்பு, 3) வார்டு–5 எஸ்பிஐ ஏடிஎம் அருகில், 4) அருள்மலர் பள்ளி பின்புறம் –1, 5) வார்டு 5 மண்டபம் அருகில், 6) வார்டு 7 முத்துமணி வீடு அருகில், 7) வார்டு 7 மாசி வீடு அருகில், 8) வார்டு 7 இமானுவேல் வீடு அருகில், 9) வார்டு 8 கணேஷ் மெடிக்கல் அருகில், 10) வார்டு 11 முன்னாள் சேர்மன் வீடு அருகில், 11) வார்டு 11 சுந்தரம் வீடு அருகில், 12) வார்டு 2 புஷ்பராணிநகர், 13) வார்டு 5 அருள்மலர் பள்ளி பின்புறம் –2. சிறுபாலங்கள் அமைப்பதற்கு இடம் தேர்வுசெய்யப்பட்டு ரூ.5.30 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 28.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 31.3.2023ஆம் தேதிய மன்ற கூட்டத்தின் தீர்மான எண்.23ன்படி குறைந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டு 31.3.2023-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டு, இளநிலை பொறியாளரால் 13 சிறுபாலம் பணிகள் முடிக்கப்பட்டமைக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு 14.11.2023-ல் தொகை வழங்கப்பட்டது. செலவு சீட்டு தொடர்பான மன்ற கூட்டத்தில் மனுதாரர் கலந்து கொண்டு வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளார். இச்செலவு சீட்டுக்கு 29.12.2023ம் தேதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மதிப்பீட்டு தொகை ரூ.5.30 இலட்சம் தொகையானது பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டவையாகும். ரூ.9.20 இலட்சம் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். இவ்விரு பணிகளும் வெவ்வேறு திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகளாகும்.

இந்நிலையில் திரு. பி.எம். பொன்மணி த/பெ மொட்டையாண்டி, 7 வது வார்டு கவுன்சிலர், இராமர்கோவில் தெரு, கெங்குவார்பட்டி என்பவரால் மேற்காணும் பணிகள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட (வழக்கு எண். WP.(MD)No.26280/2024) வழக்கில் 07.01.2025 அன்று வழங்கப்பட்ட ஆணையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் விசாரணை அழைப்பாணை எண். மு.ம.319/பேரூ/2025–1 நாள்.19.09.2025க்கு கீழ்காணுமாறு பதில் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பத்தி எண். 2</u>

வார்டு எண் 2,3,4,5,7,14 மற்றும் 15 ல் மொத்தம் 7 வார்டுளுக்கு ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறுபாலங்கள் அமைப்பதற்கு தீர்மான எண்.72 நாள்.11.11.2020ன் படி வரிசை எண்.4-ல் உள்ள வேலை தேர்வு செய்யப்பட்டு 3.2.2021 ல் பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் தொடங்கும் போது ஊர்பொதுமக்கள் தொடர் புகாரின் அடிப்படையில் மயானம் சாலை விவசாய நிலங்களின் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் நீர் அதிகரித்து சாலை அடிக்கடி மண் அரிப்பு ஏற்படுவதாகவும் அனைத்து சமுதாயத்தினரும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கு எடுத்துச்செல்லும் பாதை என்பதால் மழைக்காலங்களில் மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதனை கருத்தில்கொண்டு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பேரூராட்சி தனி அலுவலர் தீர்மான எண்.20/2022 நாள்.1.3.2022ன்படி வார்டு 6 அரிசன காலனி, வார்டு 7 மயான சாலையில் சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி 3 சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் பணிகள் முடிக்கப்பட்டமைக்கு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பத்தி எண். 3</u>

மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து செயல்அலுவலர் மற்றும் தலைவரால் நேரடியாக விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

<u>பத்தி எண். 4</u>

வார்டு எண்.2,4,5,7,8,11,12 மற்றும் 15 வார்டுகளில் சிறுபாலம் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வேலை உத்தரவு வழங்கிய சூழ்நிலையில் வார்டு 6,7 அரிசன காலனியில் 3 சிறுபாலங்களும், வார்டு 7 மயான சாலையில் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு மொத்தமாக ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் வேலைசெய்து முடிக்கப்பட்டுவிட்டது. அதன்பிறகு 26.12.2022–ம் தேதிய பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மான எண்–83 ல் பொதுநிதியில் சிறுபாலங்கள் அமைப்பதற்கு 1) வார்டு 12 தேவர் மண்டபம் அருகில், 2) வார்டு 4 முத்துமாரியம்மன் கோவில் முன்பு, 3) வார்டு–5 எஸ்பிஐ ஏடிஎம் அருகில், 4) அருள்மலர் பள்ளி பின்புறம்– 1, 5) வார்டு 5 மண்டபம் அருகில், 6) வார்டு 7 முத்துமணி வீடு அருகில், வார்டு 7 மாசி வீடு அருகில், 7) வார்டு 7 இமானுவேல் வீடு அருகில், 8)வார்டு 8 கணேஷ் மெடிக்கல் அருகில், 9) வார்டு 11 முன்னாள் சேர்மன் வீடு அருகில், 10) வார்டு 11 சுந்தரம் வீடு அருகில், 11) வார்டு 15 மீனாட்சிபுரம் பள்ளி அருகில் 12) வார்டு2 புஷ்பராணிநகர், 13) வார்டு5 அருள்மலர் பள்ளி பின்புறம் – 1 சிறுபாலங்கள் அமைப்பதற்கு இடம் தேர்வுசெய்யப்பட்டு ரூ.5.30 இலட்சத்தில் மதிப்பீடு தயார்செய்யப்பட்டு 31.3.2023ம் தேதிய மன்ற கூட்டத்தின் தீர்மான

எண்.23ன்படி குறைந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டு 31.3.2023ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டு இளநிலை பொறியாளரால் 13 சிறுபாலம் பணிகள் முடிக்கப்பட்டமைக்கு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மதிப்பீட்டு தொகை ரூ.5.30 இலட்சம் தொகையானது பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டவையாகும். ரூ.9.20 இலட்சம் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். இவ்விரு பணிகளும் வெவ்வேறு திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகளாகும்.

<u>பத்தி எண். 5</u>

ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதி திட்டத்தில் வார்டு 6,7 அரிசனக்காலனித் தெருவில் 3 சிறுபாலங்கள் வார்டு 6,7 மயான சாலையில் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு வேலை ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு விட்டது. பொதுநிதி திட்டத்தில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் 1) வார்டு 12 தேவர் மண்டபம் அருகில், 2) வார்டு 4 முத்துமாரியம்மன் கோவில் முன்பு, 3) வார்டு–5 எஸ்பிஐ ஏடிஎம் அருகில், 4) அருள்மலர் பள்ளி பின்புறம்– 1, 5) வார்டு 5 மண்டபம் அருகில், 6) வார்டு 7 முத்துமணி வீடு அருகில், வார்டு 7 மாசி வீடு அருகில், 7) வார்டு 7 இமானுவேல் வீடு அருகில், 8) வார்டு 8 கணேஷ் மெடிக்கல் அருகில், 9) வார்டு 11 முன்னாள் சேர்மன் வீடு அருகில், 10) வார்டு 11 சுந்தரம் வீடு அருகில், 11) வார்டு 15 மீனாட்சிபுரம் பள்ளி அருகில் 12). வார்டு 2 புஷ்பராணிநகர், 13) வார்டு 5 அருள்மலர் பள்ளி பின்புறம் – 1 ஆகிய 13 சிறு பாலங்கள் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இரு பணிகளும் வெவ்வேறு திட்டத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

<u>பத்தி எண். 6</u>

ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறுபாலங்கள் அமைப்பதற்கு தீர்மான எண்.72 நாள்.11.11.2020 ன் படி தீர்மான வரிசை எண்.4 இல் உள்ள வேலை தேர்வு செய்யப்பட்டு 3.2.2021– ல் பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் தொடங்கும் போது ஊர் பொதுமக்கள் தொடர் புகாரின் அடிப்படையில் மயானம் சாலை விவசாய நிலங்களின் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் நீர் அதிகரித்து சாலை அடிக்கடி மண்அரிப்பு ஏற்படுவதாகவும் அனைத்து சமுதாயத்தினரும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கு எடுத்துச்செல்லும் பாதை என்பதால் மழைக்காலங்களில் மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதனை கருத்தில்கொண்டு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இப்பேரூராட்சி தனி அலுவலர் 1.3.2022ம் தேதியில் தீர்மான எண்.20ன்படி மேற்கண்ட வேலைக்கு பதிலாக வார்டு 6 அரிசன காலனி வார்டு 7 மயான சாலையில் சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி பணிகள் முடிக்கப்பட்டது. இதில் எந்த விதமான தவறுகளும் நிகழவில்லை. பொதுநிதி திட்டத்தில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் 1). வார்டு 12 தேவர் மண்டபம் அருகில், 2) வார்டு 4 முத்துமாரியம்மன் கோவில் முன்பு, 3).வார்டு–5 எஸ்பிஐ ஏடிஎம் அருகில், 4) அருள்மலர் பள்ளி பின்புறம்– 1, 5) வார்டு 5 மண்டபம் அருகில், 6).வார்டு 7 முத்துமணி வீடு அருகில், வார்டு 7 மாசி வீடு அருகில், 7) வார்டு 7 இமானுவேல் வீடு அருகில், 8) வார்டு 8 கணேஷ் மெடிக்கல் அருகில், 9) வார்டு 11 முன்னாள் சேர்மன் வீடு அருகில், 10) வார்டு 11 சுந்தரம் வீடு அருகில், 11) வார்டு 15 மீனாட்சிபுரம் பள்ளி அருகில் 12). வார்டு2 புஷ்பராணிநகர், 13) வார்டு 5 அருள்மலர் பள்ளி பின்புறம்– 1, 13 சிறு பாலங்கள் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அடிப்படை வசதி திட்டத்தையும் பொதுநிதி திட்டத்தையும் ஒன்றாக இணைத்து வேலைகள் தவறுதலாக

செய்யப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். இதில் எந்தவிதமான முறைகேடும் நடக்கப்படவில்லை.

மேலும் கெங்குவார்பட்டி பேரூராட்சி தீர்மான எண்.02/2023 நாள்.27.01.2023-ல் இப்பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலங்கள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தொழிநுட்ப அனுமதியில் வார்டு எண்.7 மாசி வீடு அருகில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை விடுபட்டுள்ளது. எனவே அப்பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணியை 2023– 24ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் உரிய மதிப்பீடு பெற்று பணி மேற்கொள்ள தீர்மான எண்.99, நாள் 12.9.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதனை தொடர்ந்து பொதுநிதி திட்டத்தில் மதிப்பீடு ரூ.2.85 இலட்சத்திற்கு வார்டு – 4 பூங்கொடி வீடு, டோபி காலனி, ஆரம்ப சுகாதார நிலையம், வார்டு – 7 இராமர்கோவில் தெரு (மாசி வீடு அருகில்), வார்டு –6 முனியப்பன் வீடு, வார்டு – 10 நூலகம், பொன்னாங்கு சேர்வை தெரு கருப்பையா வீடு அருகில் சிறு பாலம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டமைக்கு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பத்தி எண். 7</u>

அடிப்படை வசதி திட்டத்தில் ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறுபாலங்கள் அமைப்பதற்கு தீர்மான எண்.72 நாள் 11.11.2020ன்படி தீர்மான வரிசை எண்.4-ல் உள்ள வேலை தேர்வு செய்யப்பட்டு 03.02.2021-ல் பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் தொடங்கும் போது ஊர்பொதுமக்கள் தொடர் புகாரின் அடிப்படையில் மயானம் சாலை விவசாய நிலங்களின் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் நீர் அதிகரித்து சாலை அடிக்கடி மண்அரிப்பு ஏற்படுவதாகவும் அனைத்து சமுதாயத்தினரும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கு எடுத்துச்செல்லும் பாதை என்பதால் மழைக்காலங்களில் மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதனை கருத்தில்கொண்டு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இப்பேரூராட்சி தனி அலுவலர் 1.3.2022ம் தேதியில் தீர்மான எண்.20ன்படி மேற்கண்ட வேலைக்கு பதிலாக வார்டு 6 அரிசன காலனி வார்டு 7 மயான சாலையில் சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி பணிகள் முடிக்கப்பட்டது. பொதுநிதி திட்டத்தில் 13 இடங்களில் சிறுபாலங்கள் அமைப்பதற்கு ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் வேலை செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் பணி உத்தரவு பெற்று வேலை செய்யப்பட்டதில் வார்டு 7 மாசி வீடு அருகில் உள்ள சிறுபாலம் தவிர்த்து 13 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு தொகை வழங்கப்பட்டது. மேலும் கெங்குவார்பட்டி பேரூராட்சி தீர்மான எண்.02/2023 நாள்.27.01.2023-ல் இப்பேரூராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலங்கள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தொழிநுட்ப அனுமதியில் வார்டு எண்.7 மாசி வீடு அருகில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை விடுபட்டுள்ளது. எனவே அப்பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணியை 2023– 24ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் உரிய மதிப்பீடு பெற்று பணி மேற்கொள்ள தீர்மான எண்.99, நாள்.12.9.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதனை தொடர்ந்து 2023–24 பொதுநிதி திட்டத்தில் மதிப்பீடு ரூ.2.85 இலட்சத்திற்கு வார்டு – 4 பூங்கொடி வீடு, டோபி காலனி, ஆரம்ப சுகாதார நிலையம், வார்டு – 7 இராமர்கோவில் தெரு (மாசி வீடு அருகில்), வார்டு –6 முனியப்பன் வீடு, வார்டு – 10 நூலகம், பொன்னாங்கு சேர்வை தெரு கருப்பையா வீடு அருகில் சிறு பாலம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டமைக்கு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு

பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

பத்தி எண். 8

தீர்மான புத்தகத்தில் தீர்மான பொருட்கள் அனைத்தும் அலுவலக பணியாளர்கள் மூலமாக எழுதப்பட்டு அதனை முழுமையாக தனி அலுவலரால் படித்து பார்வையிட்டு செயல் அலுவலருடன் ஆலோசனை செய்து அதன்பிறகு முடிவெடுத்து தனி அலுவலரால் தீர்மானங்கள் எழுதப்பட்டு வரப்பட்டுள்ளது. இதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை. மேலும் மனதாரரால் குறிப்பிடப்பட்ட 25.10.2016 முதல் 01.03.2022 வரை தனி அலுவலரால் தீர்மான புத்தகத்தில் பதிந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வரப்பட்டுள்ளது. இதில் தற்போது உள்ள பேரூராட்சி மன்ற தலைவர் பதவி ஏற்கப்படவில்லை.

பத்தி எண். 9

30.9.2022-ல் கூட்டம் நடைபெற்றதில் 6 பொருட்கள் சேர்க்கப்பட்டு பொருள்கள் அனைத்தும் மன்றத்தில் வாசிக்கப்பட்டு அனைத்து தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது. வருகைபுரிந்த உறுப்பினர்களிடம் வருகை பதிவேட்டில் ஒப்பம் பெறப்பட்டு மன்ற கூட்டமர்வுபடி வழங்கப்பட்டுள்ளது. தீர்மானங்கள் எழுத வேண்டியது தலைவரின் கடமையாகும். அதன் அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பத்தி எண். 10

2021 – 2022ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய (Tied Grant) திட்டத்தில் வார்டு – 6 சேவிக்குடும்பன் தெரு சேவி வீடு அருகில், வார்டு – 10 வீரணபிள்ளை தெரு, வார்டு – 5 உசையப்பா தெரு அருள்மலர் பள்ளி பின்புறம், வார்டு – 13 செங்குளத்துப்பட்டி மயானம் ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்ட நிலையில் வார்டு – 5 உசையப்பா தெருவின் நிர்வாக அனுமதியின்படி ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேவிக்குடும்பன் தெரு வார்டு எண்.7 சேர்ந்ததாகும். வார்டு எண் 7 சேவி வீடு அருகில் ஏற்கனவே ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு – 6 பழனிச்சாமி வீடு அருகில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், வார்டு – 10 வீரணபிள்ளை தெருவில் ஆழ்துளைக்கிணறு அமைக்கும் வண்டி செல்ல இயலாத காரணத்தினாலும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் வார்டு – 2 கோம்பை ரோட்டில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், வார்டு 13 மயானத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு 13 செங்குளத்துப்பட்டி ஊர் பகுதியில் அமைக்கவும் மன்ற தீர்மான எண்.77 நாள்.13.07.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் பணிகள் முடிக்கப்பட்டு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற் பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

பத்தி எண். 11

மேலும் பத்தி 10-ல் கூறப்பட்டுள்ளபடி மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் 2021 – 2022ஆம் ஆண்டு 15 வது நிதிக்குழு மான்ய (Tied Grant) திட்டத்தில் வார்டு – 6 சேவிக்குடும்பன் தெரு சேவி வீடு அருகில், வார்டு – 10 வீரணபிள்ளை தெரு, வார்டு – 5 உசையப்பா தெரு அருள்மலர் பள்ளி பின்புறம், வார்டு – 13 செங்குளத்துப்பட்டி மயானம் ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்ட

நிலையில் வார்டு – 5 உசையப்பா தெருவின் நிர்வாக அனுமதியின்படி ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேவிக்குடும்பன் தெரு வார்டு எண்.7 சேர்ந்ததாகும். வார்டு எண் 7 சேவி வீடு அருகில் ஏற்கனவே ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு – 6 பழனிச்சாமி வீடு அருகில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், வார்டு – 10 வீரணபிள்ளை தெருவில் ஆழ்துளைக்கிணறு அமைக்கும் வண்டி செல்ல இயலாத காரணத்தினாலும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் வார்டு – 2ல் ஆழ்துளை கிணறு அமைக்கவும், வார்டு 13 மயானத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு 13 செங்குளத்துப்பட்டி ஊர் பகுதியில் அமைக்கவும் மன்ற தீர்மான எண்.77 நாள்.13.07.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் பணிகள் முடிக்கப்பட்டு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>பத்தி எண். 12</u>

இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.65 நாள்.30.9.2022ன்படி தேர்வு செய்யப்பட்ட வேலைகள் செய்ய முடியாததால் மறு தீர்மான எண் 77 நாள் 13.7.2023ன்படி மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வேலைகள் பத்தி எண்.10ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி பணிகள் முடிக்கப்பட்டு இளநிலை பொறியாளரால் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் பணிகள் முடிக்கப்பட்டமைக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் திரு.பி.எம்.பொன்மணி த/பெ மொட்டையாண்டி, 7 வது வார்டு கவுன்சிலர், இராமர்கோவில் தெரு, கெங்குவார்பட்டி என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிப்பேரரசரால் 07.01.2025ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் விசாரணை அழைப்பு ஆணை.மு.ம.319/பேரூ/2025–1 நாள்.19.09.2025க்கு பதில் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

5. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண். W.P.(MD)No. 26280 of 2024-ல் 07.01.2025 நாளிட்ட ஆணையை நிறைவேற்றும் பொருட்டு, தேனி மாவட்டம், கெங்குவார்பட்டி அஞ்சல், ராமர் கோவில் தெரு என்கிற முகவரியை சார்ந்த திரு. P.M. பொன்மணி என்பவரின் 28.11.2023 நாளிட்ட புகார் மனு குறித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு மனுதாரர் திரு. P.M. பொன்மணி மற்றும் எதிர்மனுதாரான கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 09.10.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.09.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரரான திரு. P.M. பொன்மணி மற்றும் திருமதி V. முத்துமணி, வழக்கறிஞர் ஆகியோர் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதில் –

<u>I சிறு பாலங்கள் அமைப்பதில் முறைகேடு:-</u>

- கெங்குவார்பட்டி பேரூராட்சியின் தனி அலுவலராக திருமதி. அம்புஜம் என்பவர் அரசாணை எண். 145, நாள் 24.10.2016ன்படி நியமனம் செய்யப்பட்டு தனி அலுவலரின் பணிக் காலம் 28.02.2022 தேதியுடன்

முடிவுற்றுள்ள நிலையில் 01.03.2022 அன்று சாதாரண கூட்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம், கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 2020-21ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட 7 வார்டுகளில் (வார்டு எண்கள் 2,3,4,5,7,14,15) ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறு பாலங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில், மேற்காணும் வார்டுகளில் பாலங்கள் கட்டாமல், போலியான ஆவணங்களின் மூலம் கட்டியதாக மேற்காண் நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

- திருமதி. அம்புஜம் அவர்களால் 01.03.2022 அன்று போடப்பட்ட தீர்மானத்தில் ரூ.9.20 இலட்சத்தில் பேரூராட்சி தலைவர் வார்டான 6வது வார்டிலும் எனது (பொன்மணி) 7வது வார்டிலும் 13 சிறுபாலங்கள் கட்டியதாக போடப்பட்ட தீர்மானம் முற்றிலும் பொய்யானதாகும்.

- 01.03.2022 அன்று திருமதி அம்புஜம் அவர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு பொய்யான தீர்மானம் என்பதற்கு சான்றாக 01.03.2022 அன்று திருமதி அம்புஜம் அவர்கள் வடுகப்பட்டி பேரூராட்சி வருகைப் பதிவேட்டின்படி வடுகப்பட்டி பேரூராட்சிக்கு வருகைப் புரிந்துள்ளதாக கையொப்பம் செய்துள்ளார்.

- ஆனால் 2020-21ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படாததால், இதனை நேர் செய்யும் வகையில் மேற்காணும் 7 வார்டுகளில் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறு பாலங்கள் கட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் அமைக்க பேரூராட்சி மன்றத்தில் 31.03.2023 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- 31.03.2023 அன்றைய பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி, எனது வார்டான 7-வது வார்டில் மட்டும் நிதிபற்றாக்குறை காரணமாக சிறுபாலம் அமைக்கப்படவில்லை.

- இந்நிலையில் மன்ற தீர்மானப்படி 7-வது வார்டில் சிறுபாலம் அமைக்காமல், மன்ற தீர்மானத்தில் நிறைவேற்றப்படாத 9-வது வார்டில் பாலம் அமைக்கப்பட்டு, அதற்கு பின்னேற்பு தீர்மானமும் பெறப்பட்டுள்ளது.
- இந்நாள்வரை மன்ற தீர்மானத்தின்படி 7-வது வார்டில் சிறுபாலம் கட்டப்படவில்லை.

<u>II போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைப்பதில் முறைகேடு:</u>

- 2021-22ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிட்டுள்ள 4 வார்டுகளில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்க பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை 30.09.2022 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (i) | வார்டு எண்.5 | உசையப்பா தெரு (அருள்மலர் பள்ளி பின்புறம்) |
| (ii) | வார்டு எண்.6 | சேவிகுடும்பன் தெரு (சேவி வீடு அருகில்) |

(iii) வார்டு எண்.10 வீரணப்பிள்ளை தெரு

(iv) வார்டு எண்.13 செங்குளத்துப்பட்டி மயானம் அருகில்

- மன்ற தீர்மானப்படி, சேவி குடும்பன் தெருவானது 6வது வார்டில் இல்லை. 7வது வார்டில் அமைந்துள்ளது. சேவி வீடும் 7வது வார்டில் அமைந்துள்ள நிலையில் சேவி வீடு அருகில் ஏற்கனவே போர்வெல்லுடன், அடிகுழாய் அமைந்துள்ளது. இவ்விடத்தில் சின்டெக்ஸ் அமைக்க போதுமான இடவசதி இல்லை என நிராகரிக்கப்பட்டது. ஆனால் அவ்விடத்தில் ராமர்கோவில் நாடகமேடை கடை எண்.3 பொது விநியோக நியாய விலை கடை அமைந்துள்ளது. ஆகையால் சின்டெக்ஸ் அமைப்பதற்கு போதுமான இடவசதி உள்ளது. ஆனால் தேவையற்ற காரணங்களை கூறி போர்வெல்லுடன் சின்டெக்ஸ் அமைப்பது என நிதி ஒதுக்கீட்டில் முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

- இந்நிலையில் 7-வது வார்டில் சின்டெக்ஸ், போர்வெல் அமைக்காமல் 6-வது வார்டில் உள்ள சங்கிலி வீரன் வீடு அருகில் ஏற்கனவே போர்வெல் மற்றும் அடிகுழாய் உள்ளதை முறைகேடாக கணக்கு காட்டி எவ்வித தீர்மானம் இல்லாமல் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்ததாக போலி பட்டியல் மூலம் நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

- வார்டு எண்.10-ல் எந்த வீட்டின் அருகில் போர்வெல் அமைப்பது குறித்து தெரிவிக்கப்படாமல் தீர்மானம் நிறைவேற்றி உள்ள நிலையில், 10வது வார்டில் அமைப்பதற்கு பதிலாக தீர்மானம் நிறைவேற்றப்படாத 2வது வார்டில் கோம்பை ரோடு செல்லும் மெயின்சாலை அருகில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கப்பட்டுள்ளது.

- வார்டு எண்.13-ல் மயானத்தில் ஏற்கனவே போர்வெல் அமைத்து அடிகுழாய் உள்ள நிலையில், இவ்விடத்தில் சின்டெக்ஸ் மட்டும் அமைத்தால் போதுமானது. அப்பணியை செய்யாமல் மன்ற தீர்மானம் இல்லாமல் செங்குளத்துப்பட்டி ஊருக்கு வெளியே உள்ள தங்கம்மாள் தெருவில் மாயாண்டி வீட்டின் அருகில் போர்வெல்லுடன் சின்டெக்ஸ் அமைக்கப்பட்டுள்ளது.

- கடந்த 4 வருடங்களாக வார்டு எண்.7-ல் 3 சிறு பாலங்கள் மற்றும் 1 சின்டக்ஸ் மட்டுமே உள்ள நிலையில், 7வது வார்டில் கோரிக்கையாக சமர்ப்பிக்கப்படும் எவ்வித பணிகளும் பேரூராட்சியால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மேற்கொள்ளப்படுவதில்லை.

- மேலும் விசாரணையின் போது செயல் அலுவலர் குறிப்பிட்டபடி ரூ.9.20 இலட்சத்தில் 6வது வார்டு மற்றும் 7வது வார்டில் 4 சிறுபாலங்களுடன் தடுப்புசுவர் கட்டப்பட்டதாக கூறியது தவறு. ஆனால் ரூ.40 இலட்சத்தில்தான் வார்டு எண்.6,7,11, 12 ஆகிய வார்டுகளில் எவ்வித மன்றத்தின் தீர்மானமின்றி சிறுபாலங்களும் தடுப்புசுவர் கட்டப்பட்டுள்ளது என்பது ஏற்புடையாகாது.

மேற்காணும் நிலையில், பேரூராட்சி மன்ற தீர்மானப்படி 7-வது வார்டில் சிறுபாலம் கட்டப்படாமலும் மற்றும் மன்ற தீர்மானத்திற்கு எதிராக 3 பல்வேறு இடங்களில் போர்வெல்லுடன் சின்டெக்ஸ் முறைகேடாக அமைத்து நிதிமுறைகேடுகள் செய்த பேரூராட்சி அதிகாரிகள் மீது

உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரான திரு. P.M. பொன்மணி என்பவர் 09.10.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது, சமர்ப்பித்த 09.10.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் கூடுதல் தகவல்களை தெரிவித்துள்ளார்.

"புகார் மனுவிலும், வழக்குரையிலும் சொல்லியுள்ள விபரங்கள் மற்றும் தாக்கல் செய்த ஆவணங்கள் தவிர மேலும், இந்த வழக்கு சம்பந்தமாக கூடுதல் தகவல் மற்றும் ஆவணங்கள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு தனி அலுவலர் நியமனம் அரசாணை எண். 145, நாள் 24.10.2016ன்படி தனி அலுவலர் நியமனம் செய்யப்பட்டது.
2. தனி அலுவலரின் பணிக்காலம் 28.02.2022-ல் தேதியுடன் முடிவுற்று உள்ளாட்சி பிரதிநிதிகள் பொறுப்பேற்கப்பட்டது.
3. கெங்குவார்பட்டி பேரூராட்சிக்கு தனி அலுவலராக வடுகபட்டி பேரூராட்சி செயல் அலுவலராக இருந்த திருமதி. மு. அம்புஜம் அவர்கள் தனி அலுவலராக இருந்தார்கள். அவர்களின் பணிக்காலம் 28.02.2022 உடன் முடிவுற்றது.
4. அவ்வாறான சூழ்நிலையில் திருமதி. அம்புஜம் அவர்கள் கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 01.03.2022-ல் சாதாரண கூட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்ட பொய்யான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வாயிலாக பேரூராட்சி தலைவர் வார்டான 6வது வார்டுக்கும் என்னுடைய வார்டான 7வது வார்டுக்கும் 13 சிறு பாலங்கள் ரூபாய் 9,20,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபதாயிரம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தீர்மானம் இயற்றப்பட்டு இருப்பது மோசடியான செயல். மேலும் இன்றளவும் மேற்படி பணிகள் நடைபெறவும் இல்லை, நிறைவேறவும் இல்லை.
5. 13 சிறுபாலங்கள் அமைக்க ரூபாய் 9,20,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் 27.01.2023 அன்று நடந்த கூட்டம் வாயிலாக பொருள் எண். 2-ல் ரூபாய் 5,30,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) மீண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு 31.03.2023-ல் விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் உரிமையாளர் ஆனந்தகுமார் அவர்களால் பணி நடைபெற்றது.
6. இருந்தபோதும் தீர்மானத்தில் குறிப்பிட்ட இடத்தை விட்டு மாற்று இடங்களில் பணி செய்தார்கள். அவ்வாறானால் 13 சிறு பாலங்களுக்கு என்று ஒதுக்கிய நிதி ரூ.9,20,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபதாயிரம்) எங்கே போனது.

(i) 01.03.2022–ல் திருமதி அம்புஜம் அவர்களால் நிறைவேற்றப்பட்டதாக கூறும் தீர்மானம் ஒரு பொய்யான தீர்மானம்.

(ii) 01.03.2022-ல் திருமதி. அம்புஜம் அவர்கள் வடுகபட்டி பேரூராட்சியில் வருகைப் பதிவேட்டின்படி வடுகபட்டி பேரூராட்சிக்கு வருகை புரிந்ததாக கையொப்பம் செய்து உள்ளார்கள்.

(iii) திருமதி. அம்புஜம் அவர்கள் திரைப்படங்களில் வருவது போல் இரட்டை வேடமா?

(iv) மேலும் 28.02.2022 உடன் தனி அலுவலரின் பணிக்காலம் முடிவுற்ற பின் பொய்யாக இயற்றப்பட்ட 01.03.2022ன் தீர்மானம் எவ்வாறு ஏற்புடையதாகும்.

(v) 01.03.2022-ல் இயற்றப்பட்ட தீர்மானத்தை பதிவேட்டில் எழுதியது துப்புரவு பணியாளராக பணிபுரியும் A. பூமிநாதன் என்பவர் என்று மன்ற கூட்டத்தில்

உறுப்பினர்கள் மத்தியில் தவறை ஒப்புக்கொண்டார் அப்பொழுதைய செயல் அலுவலர் M. இராஜசேகர் அவர்கள்.

(vi) மேற்கண்ட 01.03.2022-ல் சாதாரண கூட்டம் வாயிலாக இயற்றப்பட்ட பொய்யான தீர்மானத்தின்படி அரசு நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது".

8. எதிர்மனுதாரரான கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சா. இளங்கோவன் என்பவர் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

"<u>13 சிறு பாலங்கள் அமைக்கப்பட்டது குறித்து:</u>

கெங்குவார்பட்டி பேரூராட்சி தனி அலுவலர் தீர்மான எண். 20/2022 நாள் 01.03.2022ன்படி 2020-21ம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் வார்டு எண். 2,3,4,5,7,14 மற்றும் 15ல் மொத்தம் 7 வார்டுக்கு ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கும்போது ஊர் பொதுமக்கள் தொடர் புகார் அடிப்படையில் மயானம் சாலையானது விவசாய நிலங்களின் மேட்டுப் பகுதியில் அமைந்துள்ளதால் மழைக் காலங்களில் நீர் அதிகரித்து சாலை அடிக்கடி மண் அரிப்பு ஏற்படுவதாகவும், அனைத்து சமுதாயத்தினரும் இறந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கு எடுத்துச் செல்லும் பாதை என்பதால் மழைக் காலங்களில் மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலத்தினை கருத்தில் கொண்டு மேற்படி இப்பேரூராட்சி தனி அலுவலரின் தீர்மான எண். 20 நாள் 01.03.2022-ல் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு பதிலாக வார்டு 6 அரிசன காலனி, வார்டு 7 மயான சாலையில் 4 சிறு பாலங்கள் மற்றும் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி பணிகள் முடிக்கப்பட்டது.

இந்நிலையில் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ள 13 இடங்களில் சிறு பாலங்கள் அமைப்பதற்கு பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் பணி உத்திரவு பெற்று பணிகள் செய்யப்பட்டதில் வார்டு 7 மாசி வீட்டின் அருகில் உள்ள சிறு பாலங்கள் தவிர்த்து 13 சிறு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு தொகை வழங்கப்பட்டது.

விடுபட்ட 7-வது வார்டில் சிறு பாலம் அமைக்கும் பணியினை 2022-23ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் உரிய மதிப்பீடு பெற்று பணி மேற்கொள்ள தீர்மான எண்.99 நாள் 12.09.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2023-24 பொது நிதி திட்டத்தில் ரூ.2.85 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு 4, பூங்கொடி வீடு, டோபி காலனி, ஆரம்ப சுகாதார நிலையம், வார்டு 7, இராமர் கோவில் தெரு (மாசி வீடு அருகில்) , வார்டு 6, முனியப்பன் வீடு, வார்டு 10, நூலகம், பொன்னாங்கு சேர்வை தெரு, கருப்பையா வீடு அருகில் சிறு பாலங்கள் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டமைக்கு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு, பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற் பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தது குறித்து:</u>

2021–2022ம் ஆண்டு 15-வது நிதிக்குழு மான்ய (Tied Grant) திட்டத்தில் வார்டு 6, சேவிக்குடும்பன் தெரு, சேவி வீடு அருகில், வார்டு 10, வீரணபிள்ளை தெரு, வார்டு 5, உசையப்பா தெரு, அருள்மலர் பள்ளி பின்புறம், வார்டு 13, செங்குளத்துப்பட்டி மயானம் ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்ட நிலையில் வார்டு 5, உசையப்பா தெருவின் நிர்வாக அனுமதியின்படி ஆழ்துளை கிணறு

அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேவிக்குடும்பன் தெரு வார்டு எண்.7 சேர்ந்ததாகும். வார்டு எண்.7 சேவிவீடு அருகில் ஏற்கனவே ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு 6, பழனிச்சாமி வீடு அருகில் ஆழ்துளை அமைக்கும் வண்டி செல்ல இயலாத காரணத்தினாலும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் வார்டு 2, கோம்பை ரோட்டில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், வார்டு 13 மயானத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு 13, செங்குளத்துப்பட்டி ஊர் பகுதியில் அமைக்கவும் மன்ற தீர்மான எண்.77 நாள் 13.07.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் பணிகள் முடிக்கப்பட்டு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 09.10.2025 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள தகவல்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. இதனை தொடர்ந்து 09.10.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது மனுதாரரால் சமர்ப்பித்த 09.10.2025 நாளிட்ட மனு குறித்து எதிர்மனுதாரரான கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. சுருளிவேல் என்பவர் தனது 15.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 495/2024-ல் கீழ்க்கண்டவாறு விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

1. நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 141, நாள் 31.12.2021ன்படி தனி அலுவலரின் பதவி காலம் 01.01.2022 முதல் 30.06.2022 முடிய கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வார்டு உறுப்பினராக 02.03.2022ஆம் தேதி பதவியேற்கப்பட்டது. தலைவரின் பதவியேற்பு காலம் 04.03.2022ஆம் தேதி என்பதால் பதவியேற்கும் காலம் வரை தனி அலுவலரே பொறுப்பாக இருப்பதால் 01.03.2022ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்திற்கு தனி அலுவலருக்கு உட்பட்டதாகும்.

2. 01.03.2022-ல் வடுகப்பட்டி பேரூராட்சியில் தனி அலுவலரால் வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளார் என்று மனுதாரர் கூறியுள்ளார். கெங்குவார்பட்டி பேரூராட்சி தனி அலுவலர் வடுகப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் என்பதால் தலைமையிடத்தில் தங்கி பணிபுரிபவர். வடுகப்பட்டி பேரூராட்சிக்கும் கெங்குவார்பட்டி பேரூராட்சிக்கும் 19 கி.மீ. தூரம், மாற்று சாலையில் காரில் பயணித்தால் 15 நிமிடங்களில் வந்துவிடலாம். கூட்டம் நடைபெற்ற நேரம் முற்பகல் 11.00 மணி.

3. தீர்மான புத்தகத்தில் தீர்மான பொருட்கள் அனைத்தும் அலுவலக பணியாளர்கள் மூலமாக எழுதப்பட்டு அதனை முழுமையாக தனி அலுவலரால் படித்து பார்வையிட்டு செயல் அலுவலருடன் ஆலோசனை செய்து அதன்பிறகு முடிவெடுத்து தனி அலுவலர் தீர்மானங்கள் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." என்று தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் எதிர்மனுதாரரான கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தேனி மாவட்டம், கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 2020-21ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட 7 வார்டுகளில் (வார்டு

எண்கள் 2,3,4,5,7,14,15) ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறு பாலங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில், மேற்காணும் வார்டுகளில் பாலங்கள் கட்டாமல், போலியான ஆவணங்களின் மூலம் பாலங்கள் கட்டியதாக நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது எனவும் 2021-22ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 வார்டுகளில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கப்பட்டதிலும் நிதிமுறைகேடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்திருப்பது மனுதாரரின் 28.11.2023 நாளிட்ட மனு மற்றும் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது சமர்ப்பித்த வாக்குமூலம் ஆகியவற்றில் இருந்து அறிய முடிகிறது. மேலும் மனுதாரர் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையின்போது சமர்ப்பித்த 09.10.2025 நாளிட்ட மனுவில், அரசாணை (நிலை) எண். 145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.10.2016-ல் வெளியிடப்பட்ட ஆணையில் பேரூராட்சி செயல் அலுவலர்கள் தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டனர் எனவும் தனி அலுவலர்களின் பதவிக் காலம் 28.02.2022 அன்றுடன் முடிவுற்று உள்ளாட்சி பிரதிநிதிகள் பொறுப்பேற்கப்பட்ட நிலையில், 01.03.2022 அன்று திருமதி. அம்புஜம் என்பவர் தேனி மாவட்டம் வடுகபட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வந்த நிலையில், எதன் அடிப்படையில் 28.02.2022 அன்றுடன் தனி அலுவலர் பதவி காலம் முடிந்த பின்னரும் 01.03.2022 அன்று வடுகப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. அம்புஜம் என்பவர் கெங்குவார்பட்டி பேரூராட்சியில் தனி அலுவலர் பதவியில் 01.03.2022 அன்று சாதாரண கூட்டம் நடத்தி கெங்குவார்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 7 வார்டுகளில் ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறுபாலங்கள் கட்டுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசின் விதிமுறைகளுக்கு முரணாகவும், பேரூராட்சி நிதியை கையாடல் செய்யும் வகையிலும் திருமதி. அம்புஜம் செயல்பட்டுள்ளார் என புகார் தெரிவித்திருப்பதும் அறிய முடிகிறது.

கெங்குவார்பட்டி பேரூராட்சியில் 2020-21ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு நிதி திட்டத்தில் 7 வார்டுகளில் (வார்டு எண். 2,3,4,5,7,14 மற்றும் 15) ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிறு பாலங்கள் அமைப்பதற்கு பேரூராட்சிமன்ற தனி அலுவலர் தீர்மான எண். 72 நாள் 11.11.2020-ல் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநரின் 05.01.2021 நாளிட்ட கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பேரூராட்சிமன்ற தீர்மான எண். 8/2021 நாள் 03.02.2021-ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தனி அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டு பணி ஆணை வழங்கி பணிகள் தொடங்கும் நிலையில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி பேரூராட்சி தீர்மான எண். 8/2021 நாள் 03.02.2021-ல் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு பதிலாக வார்டு 6 அரிசன காலனி, வார்டு 7 மயான சாலையில் சிறுபாலங்கள் மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு பேரூராட்சி தீர்மான எண். 20/2022 நாள் 01.03.2022-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இதனை தொடர்ந்து பேரூராட்சிமன்ற தீர்மான எண். 72, நாள் 11.11.2020-ல் தேர்வு செய்யப்பட்ட 13 இடங்களில் 2022-23ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் 7 வார்டுகளில் சிறுபாலங்கள் அமைக்க தீர்மான எண். 23 நாள் 31.03.2023-ல் தீர்மானம் நிறைவேற்றி பணிகள் செய்யப்பட்டதில் வார்டு 7 மாசி வீட்டின் அருகில் உள்ள சிறுபாலங்கள் தவிர்த்து ஏனைய சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது. இதனை தொடர்ந்து விடுபட்ட 7வது வார்டில் சிறுபாலம் அமைக்கும் பணியானது 2023-24ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய வருகிறது.

மேலும் அரசாணை எண். 141, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.12.2021-ல் வெளியிடப்பட்ட ஆணையில் தனி அலுவலரின் பதவி காலம் 01.01.2022 முதல் 30.06.2022 முடிய கால நீட்டிப்பு செய்யப்பட்ட நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினராக 02.03.2022 அன்று பதவியேற்றனர். தலைவரின் பதவியேற்பு

காலம் 04.03.2022ஆம் தேதி என்பதால் தலைவர் பதவியேற்கும் காலம் வரை தனி அலுவலரே பொறுப்பாக இருப்பதால் 01.03.2022 அன்று நடைபெற்ற பேரூராட்சிமன்ற கூட்டத்திற்கு தனி அலுவலருக்கு உட்பட்டதாகும் என்பதையும் மற்றும் கெங்குவார்பட்டி பேரூராட்சி தனி அலுவலர் வடுகபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் என்பதால் தலைமையிடத்தில் தங்கி பணிபுரிகிறார் எனவும், வடுகபட்டி பேரூராட்சிக்கும் கெங்குவார்பட்டி பேரூராட்சிக்கும் 19 கி.மீ. தூரம், மாற்று சாலையில் காரில் பயணித்தால் 15 நிமிடங்களில் வந்து விடலாம் மற்றும் கூட்டம் நடைபெற்ற நேரம் முற்பகல் 11.00 மணி என பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினர்களாக 02.03.2022 அன்று பதவியேற்க உள்ள நிலையிலும், பேரூராட்சி தலைவரின் பதவியேற்பு காலம் 04.03.2022 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், 3 நாட்கள் காத்திருக்காமல், அவசரமாக பேரூராட்சி செயல் அலுவலர், தனி அலுவலர் பதவியில் 01.03.2022 அன்று ஏற்கனவே பணி செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட இடங்களுக்கு பதிலாக புதிதாக பணிகள் மேற்கொள்வதற்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தீர்மானம் (தீர்மான எண். 20/2022 நாள் 01.03.2022) நிறைவேற்றியுள்ள கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கையானது சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் உள்ளது.

2021–2022ஆம் ஆண்டு 15-வது நிதிக்குழு மான்ய (Tied Grant) திட்டத்தில் வார்டு 6– சேவிக்குடும்பன் தெரு, சேவி வீடு அருகில், வார்டு 10, வீரணபிள்ளை தெரு, வார்டு 5– உசையப்பா தெரு, அருள்மலர் பள்ளி பின்புறம், வார்டு 13, செங்குளத்துப்பட்டி மயானம் ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணிக்கு பணியாணை வழங்கப்பட்ட நிலையில் வார்டு 5– உசையப்பா தெருவில் நிர்வாக அனுமதியின்படி ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் இதில் சேவிக்குடும்பன் தெரு வார்டு எண்.7 சேர்ந்ததாகும். வார்டு எண்.7 சேவிவீடு அருகில் ஏற்கனவே ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு 6- பழனிச்சாமி வீடு அருகில் ஆழ்துளை கிணறு அமைக்கும் வண்டி, செல்ல இயலாத காரணத்தினாலும் பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் வார்டு 2- கோம்பை ரோட்டில் ஆழ்துளை கிணறு அமைக்கவும், வார்டு 13 மயானத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு 13- செங்குளத்துப்பட்டி ஊர் பகுதியில் அமைக்கவும் மன்ற தீர்மான எண்.77 நாள் 13.07.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் பணிகள் முடிக்கப்பட்டு இளநிலை பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில் கெங்குவார்பட்டி பேரூராட்சியில் கீழ்க்காணும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

| வரிசை எண். | திட்டப் பணிகள் | மேற்கொள்ளப்பட்ட செலவினம் |
|---|---|---|
| 1 | 2020-21ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் வார்டு 6 மற்றும் 7-ல் சிறுபாலங்கள் மற்றும் தடுப்புச்சுவர் கட்டியது | ரூ.9.20 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 2 | 2022-23ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் சிறு பாலங்கள் அமைக்கப்பட்டது | ரூ.5.30 இலட்சம் |
| 3 | 2023-24ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் சிறுபாலங்கள் அமைக்கப்பட்டது | ரூ.2.85 இலட்சம் |
| 4 | 2021-22அம் ஆண்டு 15-வது நிதிக்குழு மானிய திட்டத்தின் (Tied Grant) கீழ் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைக்கப்பட்டது | ரூ.3.00 இலட்சம் |

மேலே தெரிவிக்கப்பட்ட 4 திட்டப் பணிகள் அனைத்தும் தரமாகவும், எவ்வித முறைகேடின்றியும் பணிகள் முழுமையாக நடைபெற்றுள்ளனவா என்பதை உறுதிசெய்திடும் பொருட்டு பேரூராட்சிகளின் இயக்குநரக செயற் பொறியாளரின் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து அக்குழுவின் மூலம் நேரடி கள ஆய்வு செய்து அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பெற்று, அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சியின் 4 திட்டப் பணிகளில், பேரூராட்சியால் மேற்கொண்ட செலவினங்களில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து, அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P.M. பொன்மணி ,
7-வது வார்டு கவுன்சிலர்,
ராமர் கோவில் தெரு, கெங்குவார்பட்டி அஞ்சல்,
பெரியகுளம் வட்டம்,
தேனி மாவட்டம் - 625 203.

2) செயல் அலுவலர்,
கெங்குவார்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

**<u>நகல்</u>**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/2/26

செயலாளர்

20/2/26.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032